Registered as a News paper    பக்கங்கள் - 08    விலை - ரூபா 07

# தமிழ்அலை

Tamilalai

தினசரி

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நித்தி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

அலை - 01    06-01-2004 செவ்வாய்க்கிழமை    ஒலி - 92

## வாழைச்சேனையில் பஸ் சாரதி மாணவன் மீது தாக்குதல்

### விசாரணை நடத்த அதிபர் கோரிக்கை

(எஸ்.ஜெயானந்தமூர்த்தி)

வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் பஸ் சாரதியால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு இந்துக் கல்லூரி அதிபர்மற்றும் பாடசாலை நிருவாகம் வாழைச்சேனை நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி சாலை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுக்காலை நாசிவன்தீவிலிருந்து வாழைச்சேனைக்கு வந்த பஸ் வண்டியில் ரிக்கற் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட ரிக்கற் பரிசோதகர்கள் மாணவர்கள் சிலர் ரிக்கற் இல்லாது இருப்பதைக்கண்டு கேட்ட போது நடத்துனரிடம் பணம் கொடுத்த போதும் பயணச் சீட்டு தரவில்லை என மாணவர்கள் பதிலளித்தனர்.

உடனே சாரதி பஸ் வண்டியை

தொடர்ச்சி 8ம் பக்கம்)

### செய்தி சேகரிக்கச் சென்ற

## யாழ் ஊடகவியலாளர் தவச்செல்வனுக்கு சிறிலங்கா படையதிகாரி கொலை மிரட்டல்

(நமது நிருபர்)

யாழ் ஊடகவியலாளர் வே.தவச்செல்வன் நேற்றுகாலை பலாலி விமானப்படைத் தளத்திற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற போது சிறிலங்கா படையினரால் மிரட்டி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக யாழ் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றுக்காலை மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் தேரர்கள் மற்றும் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா ஆகியோர் பலாலி விமானப்படைத் தளத்திற்கு வந்து இறங்கியதும் அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற யாழ் ஊடகவியலா ளர்களின் கையடக்கத் தொலைபேசி, புகைப்படக் கமராக்கள் என்பவற்றை சிறிலங்காப் படையினர் பறித்த பின்பே செய்தி சேகரிக்க உள்ளே அனுமதித்துள்ளனர்.

பின்னர் இக்குழுவினருடன் பின் தொடர்ந்து செய்தி சேகரிக்க முயற்சித்த

தொடர்ச்சி 8ம் பக்கம்)

# கிழக்குப் பல்கலைகழகத்தில்

# ஜனவரி 21ம் திகதி பொங்குதமிழ்

## தமிழ் முஸ்லிம் சமூகம் இணைந்து ஏற்பாடு

(அரியம்)

**கிழக்குப் பல்கலைக்கழக த்தில் எதிர்வரும் ஜனவரி 21ம் திகதி மட்டு அம்பாறை மாவட்ட தமிழ் முஸ்லிம்கள் இணைந்து மாபெரும் பொங்குதமிழ் நிகழ்வு நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று பிற்பகல் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில்

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மா.செ. மூக்கையா, அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி, மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி தலைவர் வி. இராமநாதன், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் இரா.துரைரெத்தினம் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கப் பிரதிநிதிகள் அடங்கலாக ஏராளமானோர் கலந்து கொண்டனர். பொங்குதமிழை மிகப் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை பொங்குதமிழ் நிகழ்வை திறம்பட நடத்தும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)


## நோர்வே அதிகாரிகளை அமைச்சர் மிலிந்த சந்தித்து பேச்சு

(நமது நிருபர்)

நோர்வேக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கீசன், மற்றும் சமாதான சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நின்றுபோன சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும், தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை குறித்தும் அமைச்சர் நோர்வே பிரதி நிதிகளிடம் விளக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை டோக்கியோ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட நிதி உதவியை பெற்று கொள்வது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.



சார்க் மாநாட்டிற்குச் சென்றிருந்த இந்திய பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை சந்தித்து கைலாகு கொடுத்த போது எடுக்கப்பட்ட படம்.

## களுவாஞ்சிகுடி சாலை ஊழியர்கள் நேற்று பிற்பகல் மீண்டும் வேலை நிறுத்தம்

(எஸ்.ரவீந்திரன், புட்கரன்)

களுவாஞ்சிகுடி பஸ்சாலை ஊழியர்கள் நேற்று காலை 10 மணி தொடக்கம் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக நடாத்தி வந்தவேலை நிறுத்தப் போராட்டம் ஞாயிறுமாலை நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி தலைவர், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை ஆகியோர் பஸ்சாலை ஊழியர்களுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து முடிவுக்கு வந்தது.

நேற்று காலை 10 மணிக்கு முன்னதாக நவம்பர் மாதத்திற்கான சம்பளப் பணத்தையும், எதிர்வரும் 8ம் திகதி டிசம்பர் மாதத்திற்கான சம்பளத்தையும் தருவதாக தெரிவிக்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பதின்மூன்று வருடங்களின் பின் தங்கவேலாயுதபுரம் பாடசாலை திறப்பு

(ஜீவா, உதயன்)

பதின்மூன்று வருடங்களின் பின் நேற்று தங்கவேலாயுதபுரம் அ.த.க.பாடசாலை திறக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன், மாருதியன் படையணிப் பொறுப்பாளர் சச்சுமாஸ்ரர், அக்கரைப்பற்று கல்வி பொறுப்பாளர் சங்கர், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம். காசிம், கோட்டைக்கல்வி அதிகாரி தி.கணேசமூர்த்தி மற்றும் ஆசிரி யர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சம்பிரதாய பூர்வமாக நாடாவைவெட்டி பாடசாலையைத் திறந்து வைத்தார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### போடியார் பொறி வெடி

சமாதானத்தை முன்னெடுப்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

-ஜனாதிபதி-



உடகட்டில உறுதி, உள்ளத்தில குருதி உங்கட சுருதி எங்களுக்கு விளங்காதா....

தமிழ் அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com.
இணையத்தளம்:- www.tamilalai.net

06.01.2004

## அழுத்தம் மேல் அழுத்தம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதில் தற்போதுஅமெரிக்கா அதிக அக்கறை காட்டியிருப்பது வரவேற்கத் தக்க விடயம்.

ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி அரசிடமிருந்து மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை தன் வயப்படுத்தியதைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிகார இழுபறி உச்சக்கட்டத்தையடைந்து விட்டது.

ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையிலான அதிகாரப் போட்டிகளைத் தீர்க்கும் வகையில் அந்தரங்கமாகக் கூடிக் குலாவிய போதும் தீர்வின்றி பிரிந்து விட்ட நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தை என்பது நட்டாற்றில் விட்ட கதையாகி விட்டது.

இத்தகைய ஒரு சூழலில் அமெரிக்கா சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. கடந்த வாரம் அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இவ்வாறானஒரு அறிவித்தல் விடுத்திருந்து சில நாட்களின் பின்னர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் எச்சரிக்கை கலந்த வலியுறுத்தல் ஒன்றை விடுத்திருக்கின்றார். பன்னிரெண்டாவது சார்க் நாடுகளின் உச்சி மாநாடு இஸ்லாமாபாத்தில் நடைபெறும் இத்தகைய ஒரு காலகட்டத்தில் அமெரிக்கா விடுத்திருக்கும் எச்சரிக்கை ஜனாதிபதிக்கு விடுத்திருக்கும் ஒரு அழுத்தம் தான். இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தூண்டுதலால் தான் அமெரிக்கா இவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக பொதுஜனஐக்கிய முன்னிணி குற்றச்சாட்டு தெரிவித்துள்ளன.

தற்போது உள்ள சூழ்நிலையில் அரசாங்கமோ அல்லது ஜனாதிபதியோ சமாதானத்திற்கான தீர்வு முயற்சிகளை இன்னும் நகர்த்திக்கொண்டிருக்க முடியாது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே இருதரப்பும் தங்களுக்குள்ள அதிகாரப்பிணக்குகளுக்கு ஒரு தீர்வு கண்டு விடுதலைப்புலி களுடனான சமாதானப் பேச்சுக் களை மீள ஆரம்பிக்க வேண் டும்.

### இன்றைய நாள்

—

சூரி ~ காலை 06:31 மாலை 5:59
ராகு ~ பி.ப 03:06 பி.ப 04:32
எம ~ மு.ப 09:22 — மு.ப . 10:48
தெய்.முகூ ~ மு.ப.11:17 — ந.ப 12:14
நக்ஷ ~ தியா மு.இ.07.04 மு.இ.08:49
திதி ~ மு.இ 7.57 வரை சதுர்த்தசி
நக்ஷ பி.ப 02 : 15 ~ வரை மிருகசீரிடம்
சு.யோகம் ~பி.ப 02:15 வரை
சித்தம், பின்னர் மரணயோகம்
சிராத்தம் ~ மார்கழி மாத பூ.சதுர்த்தசி
பிறந்தின வழிபாடு:~ மிருகசீரிடம். .

# தாயக விடுதலைப் போரில் வீதி நாடகங்களின் பங்கு

## நாடக நெறியாளர் பாலா மாஸ்டருடன் ஒரு நேர்காணல்

(நேற்றைய தொடர்ச்சி..)

மக்கள் இந்த வீதி நாடகங்களுக்கு அளித்த வரவேற்பானது உணர்ச்சி பூர்வமானதாகும். நாம் நாடகம் நடத்துவதற் கென்று குறிப்பிட்ட ஓர் நேரத்தை ஒதுக்கவில்லை. எந்த நேரமானாலும் மக்கள் அங்கு கூடி விடுவர். தோட்ட வேலை செய்து கொண்டிருப்பவர் அதே கோலத்தில் வந்து நிற்பார். சமயலில்



ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பெண்மணி அவ்வாறே வந்து நிற்பாள். வழமையாக ஒரு நாடகத்தை, ஒரு திரைப்படத்தைப் பார்க்கப் போகும் மக்கள் அதற்கான ஒரு தயாரிப்புடன், புறப்பட்டுச் செல்வதைப் போல எமது நாடகத்திற்கு வருவதில்லை. எங்கள் வீதி நாடகங்கள் மக்கள் வாழ்வியலோடு ஒன்றிப் போனதே இதற்குக் காரணமெனலாம்.

எங்கள் வீதி நாடகங்கள். மக்களுக்குப் பல செய்திகளைச் சொல்லின. யுத்தமும், வறுமையும், நோயும் ஆட்கொண்டிருந்த வேளைகளில் அவர்களுக்கு நம்பிக்கைகளை வழங்கின. உறுதிப்பாட்டையும், உற்சாகத்தையும் அவர்களுக்குள் விதைத்தன. மக்களின் வாழ்க்கைச் சுமைகளை இந்தத் தெருவெளி அரங்கு குறைந்ததென்றே கூறலாம்.

வ்ன்னிக்கு வெளியே கொலரா நோய் பரவியிருந்த காலத்தில் அது வன்னிக்கும் காலடி எடுத்து வைத்தது. நாம் தெருவெளி அரங்குகள் ஊடாகக் கிராமங்களுக்குள் சென்று கொலரா குறித்த விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட்டோம். கொடிய கொலராவை வாசலில் வைத்தே தடுத்து நிறுத்தினோம். அரங்கினைப் பார்த்துவிட்டுச் செல்வது மட்டுமல்லாமல் அரங்கில் வெளிப்படுத்தப்படும் விடயங்களை மக்கள் கடைப்பிடிக்கவும் தொடங்கினார்கள். அந்தளவு அவர்கள் எங்கள் அரங்கச் செயற்பாடுகளோடு தம்மை இணைத்திருந்தனர். அரங்கு தங்களுக்கு நம்பிக்கை அழிக்கும் ஊடகம் என்று மக்கள் நம்பினர். எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் தெருவெளி அரங்கின் காரணமாக ஏராளமான இளைஞர் யுவதிகள் போராட்டத்தில் இணைந்தார்கள். இன்று போராளிகள் மத்தியில் நாடகம் போடும் போதுஅவர்கள் கூறுவார்கள், இந்த நாடகம் தான் தங்களைப் போராட்டத்தில் இணைத்ததென்று.

எங்கள் வீதி நாடகங்களைப் பார்க்கும் மக்கள் நாடகப் பாத்திரங்களுடன் தங்களையும் இணைத்துப் பார்க்கும் தன்மைகளையும் காண முடியும். ஒரு கொடுமை செய்கின்ற பாத்திரத்தை, மக்களே உணர்ச்சிவசப்பட்டுத் தாக்கிய சம்பவங்களும் நடைபெற்ற துண்டு. அழுதும் சிரித்தும் மகிழ்ந்தும் அவற்றை மக்கள் ரசிக்கின்றனர்.

போர் ஓய்ந்த பின்னர் சில மேடை நாடகங்களை நடாத்திப் பார்த்தோம். அவற்றில் எங்கள் கலைஞர்கள் ஈடுபாட்டோடு நடிக்க முடியாமல் போனது. மக்களாலும் அவற்றுடன் ஒன்றிப்போக முடியவில்லை. 1995ஆம் ஆண்டிற்குப் பிறகு 90 வீதமான இளைஞர் யுவதிகள் எமது தெருவெளி அரங்கச் செயற்பாடுகளிலேயே போராட்டத்தில் இணைந்தனர். என்பது குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும். கிராமியப்படை, துணைப்படை, எல்லைப்படை, என மக்களிலிருந்து பலரை எமது அரங்கு போராட்டத்தில் இணையவைத்தது.

கேள்வி:- இந்த தெருவெளி நாடக அரங்கச் செயற்பாடுகளில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கும் நெறியாளர்களைக் குறிப்பிடுவீர்களா?

பதில்:- ஆரம்பத்தில் தங்கவேல், செல்லக்குட்டி, மணியம், கண்ணதாசன், ரகு, புதுவை அன்பன், நான் (பாலா மாஸ்டர்) ஆகியோர் நெறியாளர்களாக ஈடுபட்டுக்கொண்டிருந்தோம்.

புதுவை அன்பன், நான் (பாலா மாஸ்டர்) ரகு, ஆகியோரும் இன்று வரை ஈடுபட்டு வருகின்றோம். நாடகத்தை எங்கள் வாழ்வாகக் கருதியே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

கேள்வி:- போர் ஓய்ந்துள்ள இந்த வேளையில் உங்கள் நாடகங்களின் கருப்பொருள் எவ்வாறாக அமைந்துள்ளது.

பதில்:- நாம் சூழலுக்கேற்ப செயற்படுகின்றோம். மக்களுக்கு எந்த வேளையில் எது தேவையோ அந்தந்தக்



கருத்துக்களை அந்தந்த வேளைகளில் வெளிப்படுத்திவருகின்றோம். தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழ்ப் பகுதிகளுக்கும் சென்று நாடகம் நடாத்துகின்றோம். தொலைக்காட்சி வசதி, சினிமாத்திரையரங்குகள் உள்ள பகுதிகளிலும் எமது நாடகங்களுக்கு மக்கள் பெருமளவில் வருகின்றார்கள். இது எங்களுக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் தந்தது. யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் எமது நாடகங்களுக்கு அதிக வரவேற்பிருந்தது.

கேள்வி:- எத்தனை கலைஞர்கள் உங்கள் வீதி நாடகக்குழுவில் இருக்கின்றனர்?

பதில்:- 80 பேர் வரையில் உள்ளனர். அவர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கப்படுகின்றது. மாதத்தில் 6 நாட்கள் விடுமுறை வழங்கப்படுகின்றது. அவ்வேளைகளில் அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று வருகின்றனர். நாம் நாடகத் தயாரிப்பில் வீணாக நேரத்தை செலவழிப்பதில்லை. ஒரு நாடகத்தைத் தயாரிக்க 10 அல்லது 15 நாட்கள் மட்டுமே எடுத்துக் கொள்கின்றோம். பிரமாண்டங்கள் இல்லை. எளிமை செய்திகளையும், கருத்துக்களையும் ஆழமாக விதைத்தல் உணர்ச்சி என்பனவே எமதுநாடகம்.

கேள்வி:- எத்தனை நாடகங்கள் இதுவரை நடாத்தியிருக்கின்றீர்கள்?

பதில்:- நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்கள். எல்லாம் ஆயிரம் தடவைக்கு மேல் நிகழ்த்தப்பட்டுள்ளன. புதுவை

## நேர்காணல் : விவேக்

அன்பனின் ''கரை தேடும் ஓடங்கள்" இரண்டு வருடங்களாக இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

கேள்வி:- தனிப்பட்ட ரீரியாக உங்கள் நாடக அனுபவம், செயற்பாடுகள் பற்றி கூறுங்கள்?

பதில்:- 1994ல் இருந்து தெருவெளி நாடகங்களில் ஈடுபட்டு வருகின்றேன். நான் ஒரு நாடகக்காரனாக இத்துறைக்கு வரவில்லை. திரு. சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்தேன். சமூக விடுதலை என்பதே எனது பிரதான நோக்கமாக இருந்தது.

76ல் 'சமூதாய மாற்றம்' என்றொரு நாடகம் சாதிப்பிரச்சினையை மையமாகக் கொண்டு நிகழ்த்தினேன். சாதிப்பிரச்சினை தொடர்பான திரு.சண்முகதாசனின் நிலைப்பாட்டில் எனக்கு முரன்பாடுகள் இருந்தன. அவர் அதன் வேர்களை விட்டு விட்டு கிளைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தியதாக உணர்ந்தேன் அப்போது தாழ்த்தப்பட்டோருக்கு நிலமே முக்கிய பிரச்சினையாக இருந்தது. இப்பிரச்சினையை மையப்படுத்தியே மேற் குறித்த நாடகத்தை நடாத்தினேன். இதன் விளைவாக இன்னும் உரும்பிராயில் ஒரு குடியேற்றம் உள்ளது.

பிறகு கட்சியில் இருந்து விலகி குழுவாக நாடகம் நடாத்தினேன். கிராமிய உழைப்பாளர் சங்கம் என்றொரு சங்க த்தை உருவாக்கி அதற்காக நாடகங்கள் நடாத்தினேன். இரண்டாவது நாடகம் ஒரு வீதி நாடகம் 'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்' என்று, அதன் பெயர். 126 தடவைகள் இது நடாத்தப்பட்டது. இதன் விளைவாக 256 கிளைச் சங்கங்கள் உருவாகின 79-85 காலகட்டத்தில் இந் நாடகம் நடந்தது. கல்விக் கொள்கையைமையப்படுத்தி, அடுத்து 'அவள் ஒரு மாதிரி' என்றொரு நாடகமும் அப்போது நடத்தினோம்.

பின்னர் 90ம் ஆண்டுகளிலிருந்து தொடர்ச்சியாக விடுதலை அமைப்போடு இணைந்து நாடகச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றேன்.

கேள்வி:- எம் புலம்பெயர்ந்த உறவுகள் உங்கள் நாடகங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டுமா?

பதில்:- விரைவில் கிட்டும், நாம் விரைவில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுக்கு எமது வீதி நாடகங்களைக் கொண்டு செல்லவுள்ளோம்.

(நன்றி ஈழமுரசு)

# புலிகளது அரசியல் வரைவை சிங்களக் கட்சிகள் நிராகரித்திருப்பது துரதிஷ்டமானது

## அமெரிக்கப் பேராசிரியர் ரொபேட் சி.ஒபஸ்ட்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை எடுத்த எடுப்பிலேயே இலங்கையில் உள்ள பல அரசியல் கட்சிகள் நிராகரித்திருப்பது இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசியலில் துரதிஷ்டமான ஒரு அவலத்தை யே பிரதிபலிப்பதாக அமெரிக்க நெப்ரெஸ்கா வெஸ்லி பல்கலைக்கழக பேராசிரியர் ரொபட் சீ.ஒபஸ்ட் விசனம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளால் திட்ட வரைவில் குறிப்பிட்டிருக்கும் பல்வேறு பிரச்சினை அம்சங்கள் ஓரளவு தீர்ப்பதற்கு இலகுவானவையே என தெரிவித்துள்ள அவர் வேறு சிரத்தைக்குரிய பிரச்சினைகள் தொடர்பிலும் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையின் போது தீர்த்துக் கொள்ளக் கூடியனவே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் திட்ட வரைவு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளால் சமர்ப்பிக்க பட்டுள்ள இத்திட்ட வரைவு எடுத்த எடுப்பிலேயே பல அரசியல் கட்சிகளால் நிராகரிக்கப்படுவது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல. உண்மையிலேயே இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கையில் நிலவும் ஒரு துரதிஷ்ட நிலையே இதுவாகும்.

மேலும் தீர்வுத் திட்டம் குறித்து பேசுவதற்குக் கூட ஒப்புதல் மறுக்கப்பட்டிருப்பது பாரதூரமான விசனத்துக்குரியதொரு நிலையாகும். எப்பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை இன்றி தீர்வு காணப்பட்டதாக வரலாறு எதுவும் இல்லை.

சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறைகளில் தொடர்பாடல் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அம்சம் என்பது எவருக்குமே புரிந்த தொன்றாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் ஒக்டோபர் 2003கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள அதிகாரத்துவ இழுபறி, பேச்சுவார்த்தையை முடக்கியுள்ளது. தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரத்துவக் குரலாக இரு தரப்பினருமே எதனையும் கூற முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பிரதான காரணம் ஜனாதிபதி சந்திரிகாவின் பொ.ஐ.மு.வில் அங்கம் வகிக்கும் சிங்கள தேசியவாதிகளதும் அவர்கள் ஜே.வி.பி.யோடு நட்பு உறவாட நேர்ந்திருப்பதால் பிரயோகிக்கக் கூடிய ஒரு அழுத்தமுமேயாகும். புலிகள் சமர்ப்பித்துள்ள இன்றைய இடைக்கால தன்னாட்சி அதிகார திட்ட வரைபினை உன்னிப்பாக அவதானித்தால் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்திற்கும் புலிகளின் திட்டத்துக்கும் மட்டுப் படுத்தப்பட்ட வேறுபாடுகளையே காணக்கூடியதாகவுள்ளது.

ஒருவர் ஜூன் 2003இல் சமர்பிக்கப்பட்ட அரசாங்க யோசனைகளுக்கும் (1995ஆம் ஆண்டு சந்திரிகாவின் திட்டம் கூட) புலிகளது திட்டத்துக்கும் இடையில் மிகச் சிறிய அளவிலான வேறுபாட்டையே காணமுடியும். பேச்சுவார்த்தை இரு தரப்பாருக்கும் இடையே நிலவி வரும் இடைவெளியை குறைப்ப தற்கும் மட்டுப்படுத்துவதற்குமேயாகும். எத்தகைய சமாதானமும் பேச்சுவார்த்தையின்றி எய்தப்பட்டதாக வரலாறு இல்லை.

இதேவேளை புலிகளும் தாம் தெரிவித்திருக்கும் யோசனைகள் தொடர்பில் எத்தகைய சமரசத்துக்கும் வரமுடியாதவர்கள் என ஒருவரும் கூறவுமில்லை. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் புலிகளுடன் திட்டவரைவு தொடர்பில் பேச்சுவார்த்தைக்குக் கூட அது செல்ல முடியாது தவறியிருப்பது மிகவும் விசனத்துக்குரிய ஒரு காரியம் என்றே கூறவேண்டும்.

# களுவாஞ்சிகுடி சாலை ஊழியர்கள் நேற்று வேலைக்குத் திரும்பினர்.

## பதில் முகாமையாளராக மனோகரன் நியமனம்.

(எஸ்.ரவீந்திரன்.)

நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி களுவாஞ்சிகுடிச்சாலை நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளது. அனைத்து ஊழியர்களும் மிகவும் உற்சாகத்துடன் உரிய நேரத்திற்கு கடமைக்குச் சமூகமளித்ததுடன் திறம்பட சேவையை வழங்க முயற்சிகளை மேற்கொண்டமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் களுவாஞ்சிகுடிச்சாலையின் பதில் சாலை முகாமையாளராக பொறியியலாளரும் பரிசோதனை முகாமையாளருமான ரி.மனோகரன் நியமிக்கப்பட்டார். புதிதாக பதவியேற்ற பதில் சாலை முகாமையாளரை நேற்று நேரடியாகச் சந்தித்த போது இதுவரையில் 7 பஸ்களே சேவையில் ஈடுபட்டதாகவும் நேற்று 8 பஸ்களை சேவையில் அமர்த்தியதாகவும் இருவாரம் முடிவடைவதற்குள் 10 பஸ்களை சேவையில் அமர்த்த முடியும் எனவும், இம் மாதம் முடி வடைவதற்குள் 15 பஸ்களை தான் சேவையில் ஈடுபடுத்துவேன் எனவும் தெரிவித்தார். தற்போது டிப்போவில் உள்ள 26 பஸ்களுள் 19 புதிய பஸ்கள் கட்டையில் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன. படுவான்கரைக்கான சேவையை விஸ்தரிப்பதாகக் கூறிய பதில் முகாமையாளர் தலைவர் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உரு வாக்கி பயணிகளுக்கு சீரான சேவை யை வழங்கி டிப்போவை இலாப த்தில் இட்டுச் சென்று பல முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை அவர்கள் தனதுரையில் கடந்த காலங்களில் தொழிற்சங்கங்கள் பதவி உயர்வு பழிவாங்கலில் ஈடுபட்டது. தொழிற்சங்கம் ஒழுங்காக இருந்திருந்தால் நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி நடுங்கியிருக்கும் யூ.எம்.பி தொழிற்சங்கத்திற்கு எங்கு சென்றாலும் சிறப்பு. ''யானையின் பலம் யானைக்குத் தெரியாது'' நான் அதிகாரியாக இருந்த காலங்களில் டிப்போக்கள் நன்றாக இயங்கியது. இன்று நான்கு நாள் பஸ்சேவையில் ஈடுபட்டால் 40 நாள் கட்டையில் என்றும் ஞா.கிருஸ்ணபிள்ளை தனதுரையில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# களுவன்கேணியில் மாபெரும் சிரமதானம்

(நமது நிருபர்)

களுவன்கேணியில் கிராம அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் நடைபெற்ற சிரமதானத்தின் போது அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசலை அதிபர்கள், மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டதாக அபிவிருத்திக்குழுத் தலைவர் செ.குமாரசூரியம் தெரிவித்தார்.

# களுவன்கேணியில் மதுபானம் விற்பனை செய்யத் தடை

(நமது நிருபர்)

களுவன்கேணி கிராமத்தில் கடந்த டிசம்பர் 15ம் திகதி தொடக்கம் சகல மதுபான வகைகளும் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. என களுவன்கேணி கிராம அபிவிருத்திக்குழு தமிழ் அலைக்குத் தெரிவித்துள்ளது.

மதுபான விற்பனையினால் மீனவர்களின் வருமானம் வீண்விரயமாக்கப்படுவதுடன் குடும்பங்களில் பிணக்குகள், வறுமை போன்ற துன்பங்கள் அதிகரித்துக் காணப்பட்டதையடுத்து அபிவிருத்திக்குழு மேற்படி சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. தற்போது கிராமத்தில் மதுசார விற்பனை ஒழிக்கப்பட்டதையடுத்து மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.




சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட வதிவிடப் பிரதிநிதியாகக் கடமையாற்றிய செல்வி பிலிப்பா ஜெனிபாவுக்கு இடமாற்றம் பெற்று செல்வதை இட்டு பிரியாவிடை நிகழ்வும் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மைக்கல் கிளிட்டனை வரவேற்கும் நிகழ்வும் சனிக்கிழமை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக்கிளைக் காரியாலயத்தில் நடைபெற்றது. பிலிப்பாவுக்கு ஞாபகார்த்தப் பரிசினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளைத்தலைவர் த.வசந்தராஜா வழங்கி வைப்பதையும் செல்வி பிலிப்பா உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படம் தா.வேதநாயகம்.)

# அரச சேவை கிராம உத்தியோகத்தர் சங்க நடப்பு வருட நிருவாகிகள்

மட்டக்களப்பு மாவட்ட அரச சேவைகிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவின் போது தொடர்ந்தும் கடந்த வருடம் இருந்த நிருவாகத்தையே மீண்டும் பொதுச் சபையினர் ஏகமனதாகத் தெரிவு செய்தனர். அவர்களின் விபரம் வருமாறு:-

தலைவர் :- கே.வாமதேவன்
உப தலைவர்:- எம்.ஏ.தாகா
இ.தவராஜா
செயலாளர்:- அ.நேசதுரை
உப செயலாளர்:- எம்.அழகுதுரை
இணைச் செயலாளர்:- எம்.ஐ.சுலைமாலெவ்வை பொருளாளர்:- எம்.எஸ்.ஓமர்லெவ்வை எண் பார்வையாளர்:- எம்.சாலிகு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் தலா இரு பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டனர்.

# மட் அரசசேவை கிராம உத்தியோகத்தர் சங்கம் நன்றி தெரிவிப்பு.

(நமது நிருபர்)

அரச சேவை கிராம உத்தியோகத்தர் சங்கம் அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி, மேலதிக அரச அதிபர் சி.புண்ணியமூர்த்தி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரச சேவை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் கே.வாமதேவன் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த 2000 ஆம் ஆண்டிற்கான மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்ற சிறந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான காரியாலய முகாமைத்துவப் போட்டியில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்னும் பிரேரணை28.12.2003ல் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அரச அதிபரிடமும், மேலதிக அரசாங்க அதிபரிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்திற்கு உடனடியாக அரசாங்க அதிபரும், மேலதிக அரசாங்க அதிபரும் எடுத்த துரித நடவடிக்கையினால் உரிய சான்றிதழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களுக்கும் கடந்த வருடம் அனுப்பி வைக்கப்பட்டு அவைகள் உரிய கிராம உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலாளர்களினால் வழங்கப் பட்டுள்ளன.

இந்த துரித நடவடிக்கைக்கு அரசாங்க அதிபர் இ. மோனகுருசாமி, மேலதிக அரசாங்க அதிபர் சி.புண்ணியமூர்த்திக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரச சேவை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பி வைத்துள்ளது.



மட்டக்களப்பு மாவட்ட அரச சேவை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், சேவை நலன் பாராட்டு விழாவும் ''லேக்வியூஇன்'' விருந்தினர் விடுதியில் சங்கத் தலைவர் கே.வாமதேவன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.இ.மோனகுருசாமி, சங்கத்தின் உபதலைவர் ஜனப் எம்.ஏ.தாகா உரையாற்றுவதையும், அரச அதிபர் மேலதிக அரசாங்க அதிபர் சி.புண்ணியமூர்த்தி, பட்டிப்பளை பிரதேச செயலாளர் அமலநாதன் ஆகியோர்கள் இருப்பதையும் படத்தில் காணலாம்.

# தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்க சிங்களத் தலைமைகள் முன்வர வேண்டும்!

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம்!

(நமது நிருபர்)

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கக்கூடிய முழு அதிகாரபலத் துடன் சிங்களத் தலைமை விரைவிலேயே பேச்சுக்கு முன்வரவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வருடாந்த மாநாடு ஏகமனதாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றது.அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நேற்றுக்காலை 3 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள காங்கிரஸ் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு ஆறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு -கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக அரசியல் உரிமைகள் அங்கீ கரிக்கப்படாது மறுக்கப்பட்ட ஈழம்வாழ் தமிழ் மக்களாகிய நாம் சாத்வீக ரீதியிலும், ஜனநாயக ரீதியிலும் நடத்தி வந்த போராட்டம் வெற்றிதராத நிலையில், ஆயுதம் தாங்கிய தனிநாட்டுப் போராட்டமாக எமது இனம் தனது போராட்ட வடிவத்தை மாற்றிக்கொண்டது. இதனால் ஏற்பட்ட அழிவுகளும், துயரங்களும் ஏற்படுத்திய தாக்கங்களை அனுபவித்தவர்கள் தமிழர்கள் தான் என்றாலும், நாட்டின் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டவர்கள் தான் என்பதை மறுக்கமுடியாது. இந்த அழிவுகளும் துயரங்களும் இனியும் தொடராத வகையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிபுகளை அடிப்படையாகக்கொண்டு, தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை தென்னிலங்கை அரசும், அதிகார சக்திகளும் முன்னெடுக்க தொடர்ந்தும் தாமதம் காட்டினால், நாம், நமது சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்து பிரிந் துசெல்வது தவிர்க்க முடியாததாகும். எனவே, இந்நிலைமை யைத் தவிர்ப்பதற்கு தீர்வு வழங்கக் கூடிய அதிகார பலத் துடன் சிங்களத்தலைமை தாமதமின்றி முன்வரவேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.தத்தமது வீடுகளில் குடியிருக்கும் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் எமது தாயக மக்கள் தமது சொந்த வாழ் விடங்களில் சென்றுவாழ்வதற்கு போடப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கவேண்டுமென இச்சபை கோருகின்றது. எமது கடற்றொழிலாளர்கள் தமது கடற்பிரதேசங்களில் எதுவித தடையுமின்றி தொழில் புரிவதற்கும், தமது வாழ்வாதார மேம்பாடுகளை மேற்கொள்வதற்கும் போடப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கவேண்டு மென இச்சபை தீர்மானம் நிறை வேற்றுகிறது.சர்வதேச சட்டங்களுக்கு மாறாக-பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் - அநீதியானமுறையில் கைதுசெய்யப்பட்டு எதுவித நீதிமன்ற விசாரணை களுமின்றி மனித சுதந்திரமும், உரிமையும் மறுக்கப்பட்டு பல வருடங்களாகச் சிறையில் வாடும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை உடனடி யாக விடுதலைசெய்யுமாறு இச்சபை கோருகிறது.

எமது உறவினர்கள் தேடியலைந்து கொண்டிருக்கும் காணாமற்போய்விட்ட தமது உறவுகள் தொடர்பான உண்மை நிலையினை ஒளிவுமறைவில்லாது தெரியப்படுத்தவேண்டும் என்றும், மனித உரிமை ஆணைக்குழுவினது விசாரணைக்குழு அறிக்கை யில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய நடஈடு, நிவாரணம் வழங்கவே ண்டும் என்றும் இச்சபை அரசினைக் கோருகின்றது. எமது கட்சியின் இன்றைய வளர்ச்சி நிலை மற்றும் இன்று நிலவும் தேசிய அரசியல் சூழல் என்பவற்றுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகை யில் எமது கட்சியின் யாப்பினைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று இச்சபை கருதுவதால் அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பின்வருவோரைக் கொண்ட ஒரு குழுவை நியமிப்ப தென இச்சபை தீர்மானிக்கின்றது. ஜீ.ஜீ.பொன்னம்பலம், அ.விநாயகமூர்த்தி, சி.வீ.கே.சிவஞானம், கு.மு. தர்மராசா, கலாநிதி ந.குமர குருபரன்.

# பொன்னாலை திருவடி நிலைக் கடலில் நீரில் மூழ்கிய மாணவன் மரணம்!

(நமது நிருபர்)

பொன்னாலை திருவடி நிலைக் கடலில் குளித்துக்கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவன் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு காணாமற்போயிருக்கிறான்.

பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவில் திருவெம்பாவை தீர்த்தத் திருவிழாவான நேற்று அங்கு இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

சுவாமி கடலில் தீர்த்தமாடுவதற்கு சுமார் ஒரு மணிநேரம் முன்பாக பிரஸ் தாப மாணவன் கடலில் இறங்கி குளித்துக்கொண்டிருந்தான் என்று கூறப்படுகிறது. அப்போது கடலில் திடீ ரென எழுந்த அலை அந்த மாண வனை அடித்துச்சென்றது என்றும் -

கடலில் உயிருக்காகத் தத்தளித்துக் கொண்டிருந்த மாணவனை கரை யில் நின்றிருந்த பலரும் கண்ட போதும் கடும் கொந்தளிப்பு காரண மாக அவனை மீட்க முடியாமற்போனது எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவனான முத்துலிங்கம் காந்த ரூபன் (வயது 19)என்பவரே கடலில் காணாமற்போயுள்ளார்.காணாமற்போன மாணவனைத் தேடும் முயற்சியில் மீனவர்களும், கடற் படையினரும் நேற்று மாலை இருள் பரவும் வேளைவரை ஈடுபட்டிருந்தனர். எனினும், மாணவனின் சடலம் மீட்கப்படவில்லை. கடலில் சடலத்தைத் தேடும் பணி இன்று காலை மீண்டும் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.இதேவேளை -பொன்னாலை வரதராஜப்பெரு மாள் தீர்த்த உறசவம் நேற்று வழமை போல இடம் பெற்றது.

# பொதுத் தேர்தலை சவாலாக ஏற்க அரசு தயாராக இருக்கிறது!

## அமைச்சர் கருஜெய சூரியா

(நமது நிருபர்)

ஜனாதிபதியுடனான அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்கு பொதுத் தேர்தல் தான் ஒரே வழியென்றால் அதனை எதிர்கொள்வதற்கு தயார் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஜனாதிபதியின் நிலைப்பாட்டை கருத்தில் கொண்டே அரசு இந்த முடிவை புதுவருடத்தன்று எடுத்துள்ளது.

புதுவருடத்தன்று அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அரச தரப்புக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த 31 ஆம் திகதி புதன் கிழமை இலங்கை வானொலி சுபாரதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வ தற்கான இணக்கப்பாடொன்றுக்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கதலைமையிலான அரசு முன்வராது போனால் ஜனநாயக ரீதியிலான மாற்று வழியைக்கையாளு வதைத் தவிர வேறு வழி கிடையாது எனத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துத் தொடர்பாக புதுவருட தினமான வியாழக்கிழமை அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் அரசு தரப்புக் கூட்டமொன்று நடைபெற்ற போது விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறிய அமைச்சர் கரு ஜயசூரிய, ஜனாதிபதியின் ஜனநாயக வழி மாற்றுத் திட்டம் பொதுத் தேர்தல் என்றால் அதனைச் சவாலாகவே ஏற்று முகம் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய ஜனாதிபதி தான் அதனை நேர்மையான வழியில் நடத்தி சுமுகமாகத் தீர்க்க முன்வந்திருக்க வேண்டும். ஆனால், ஜனாதிபதியின் ஒவ்வொரு நடவடிக்கையும் பிடிவாதப் போக்கைக் கொண்டதாகவே காணப்படுகிறது.

இன்றைய அரசியல் நெருக்கடி தொடருமானால் நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குள்தள்ளப் படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். சமாதான முன்னெடுப்பும், பொருளாதார அபிவிருத்தி நடவடிக் கைகளும் தற்போது முடங்கிப் போயுள்ளன. இது நிரந்தரமாக தடைப்படுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

தற்போதைய நெருக்கடிக்கு தேர்தல் தான் தீர்வு காணமுடியும் என்று ஜனாதிபதி நம்புவாரானால் அதனை எதுவித தயக்கமுமின்றி எதிர் கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது.

ஜனாதிபதி எந்த நேரத்தில் பொதுத் தேர்தலுக்கு அறிவித்தாலும் தயக்கமின்றி முகம் கொடுக்க அரசு தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமையும், செவ்வாய்க் கிழமையும் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுவும், ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழு வும் கூடி அடுத்த கட்ட நடவடிக்கை கள் குறித்து ஆராயவிருப்பதாகவும் அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

# பெப்ரவரி 22ம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி இணக்கத்துக்கு வரவேண்டும்!

## அமைச்சர் பீரிஸ்

(நமது நிருபர்)

எதிர்வரும் பெப்ரவரிமாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமருடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஸ்ரீ மகா போதி விகா ரையில் நேற்றுமுன் தினம் நடை பெற்ற விசேட பூஜையில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளாகள் மத்தியில் பேசிய போதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.பெப்ரவரி 22 ஆம் திகதி யுடன் போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவதால், அதற்கு மேலும் சமாதானப் பேச்சுக் களை இழுத்தடித்துச் செல்வது பொருததமல்ல எனவும் அவர் குறி ப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே விரைவில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டு, சமாதான முயற்சிகள் விரை வில் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காகவே இந்த விசேட பூசை நடத்தப் பட்டது.



மட்/ செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா 2002 கோல் மலர் 42வது வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது கல்குடா கல்வி வலய கல்விப் பொறுப்பாளர் திரு. கேசவன் உரையாற்றுவதை படத்தில் காணலாம்

# இடைக்கால அரசமைப்பு ஆலோசனைக்கு மு.கா. அரசியல் உயர்பீடம் அங்கீகாரம்!

(நமது நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால அரசமைப்பு ஆலேசனைக்கு அக்கட்சியின் அரசியல் உயர்பீடம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் நேற்றுமுன் தினம் இரவு கூடியது. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுமார் மூன்று மணி நேரம் அரசியல் பீட உறுப்பினர்களுக்கு இது தொடர்பாக விளக்கமளித்தார் என்று மு.கா. பொதுச்செயலர் ஹசன் அலி நேற்றுத் தெரிவித்தார்.

இடைக்கால அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டுமென்ற ஆலோசனையை முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்குச்சமர்ப் பிக்கும். இடைக்கால நிர்வாகக் கட்ட மைப்பு ஆ லோசனைகளை நடைமுறைப் படுத்துவதற்கு தற்போதுள்ள அரசமைப்பில் இடமில்லை. இந்த நிலையில், புலிகளின் இடைக் காலக் கட்டமைப்பு ஆலோசனைகளைக் கூட நடை முறை யிலுள்ள அரசமைப்பின்கீழ் நடைமுறைப்படுத்த முடியாதென்று புலிகளே தெரிவித்துள்ளனர். எனவே தான், இடைக்கால அரசமைப்பைக் கொண்டுவரவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோருகின்றதெனவும் சன் அலி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள மாற்று ஆலோசனைகள் குறித்து எதிர்வரும் 9ஆம் திகதி வடக்கிலுள்ள முஸ்லிம் புத்திஜீவிகள், கல்விமான்கள், உலமாக்கள், யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் அமைப்புகளின் பிரதி நிதிகள் ஆகியோருடன் விரிவான பேச்சு நடத்தப்படும். இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் நூர்தீன்மசூர் ,ரிசாட் பதியுதீன் எம்.பி. ஆகியோர் மேற் கொண்டுள்ளனர். இதே மாதிரியான சந்திப்புகள் கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களுடனும் ஏனைய பகுதிகளிலுள்ள முஸ்லிம் முக்கியஸ்தர்களுடனும் பேச்சு நட த்தவும் முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய மீனவர் சங்கத்தலைவர் சட்டமா அதிபரை சந்திப்பார்!

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந் திருந்த தமிழக மீனவர் சங்கத் தலைவர் யு.அருளானந்தம் நேற்று இங் கிருந்து கொழும்பு பயணமானார்.இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடித்த சமயம் கைது செய் யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடாபாக சட்டமா அதிபருடன் பேச்சு நடத்துவதற் காகவே அவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பு சென்றுள்ளார்.நீதி மன்றத்தின் சட்ட நடவடிக்கைக்கு உள்ளா கியிருக்கும் இந்திய மீனவர்களை விடுவிப்பது, சட்டமா அதிபரின் கை களிலேயே இருப்பதாக யாழ். பொலிஸாரும் சிறைச் சாலை அதிகாரிகளும் அவரிடம் தெரிவித்தனர். இதனை அடுத்தே அவர் சட்ட உதவியாளருடன் கொழும்புக்குச் சென றுள்ளார் எனத் தெரிவிக்க ப்பட்டது.

# ஐரோப்பிய நாடுகளின் வங்கிகளில் சதாம் 2.5 லட்சம் கோடி வைப்பு!

இங்கிலாந்தில் சதாம் உசேன் 18 வங்கிகளில் 2 லட்சத்து 50 ஆயிரம் கோடி வைப்புச் செய்தது தெரியவந்துள்ளது.

ஈராக் அதிபர் பதவியில் இருந்து துரத்தப்பட்ட சதாம் உசேனை அமெரிக்க படைகள் பிடித்து ரகசியமாக விசாரணை நடத்தி வருகின்றது. இங்கிலாந்து புலனாய்வு அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில் இங்கிலாந்து நாட்டில் உள்ள கியூன்ஸ் பேங்கர்கவுட்ஸ் அண்ட் கம்பெனி மற்றும் 17 வங்கிகளில் ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் கோடி அளவுக்கு வைப்புச் செய்ததை சதாம் உசேன் ஒப்புக் கொண்டுள்ளார் என்று பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது. ஈராக்கில் உள்ள மத்திய வங்கியில் இருந்த பணம் மற்றும் தங்கத்தை சதாம் உசேன் அப்படியே எடுத்துச் சென்று முதலில் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள வங்கிகளில் வைப்புச் செய்ததாகவும் பின் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு லண்டனில் உள்ள 18 வங்கிகளில் வைப்புச் செய்ததாகவும் விசாரணையின் போது சதாம் உசேன் ஒப்புக் கொண்டதாக சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது. மீண்டும் அந்தப் பணம் மற்றும் தங்கம் எடுத்துச் செல்லப்பட்டு சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ஜப்பான், பல்கேரியா ஆகிய நாடுகளில் உள்ள வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்டது என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.



லண்டன் வங்கிகளில் சதாம் உசேன் வைப்புச் செய்து வைத்திருந்த பண விபரம் பற்றிக் கூறும்படி எங்களை யாரும் முறைப்படி கேட்டுக் கொள்ள வில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரிகள் கூறினால் அது பற்றிய விபரத்தைத் தெரிவிப்போம் என்று கியூன்ஸ் பேங்கர் கவுட்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சதாம் உசேனுக்கும் அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்திற்கும் இடையே தொடர்பு இருக்கலாம் என்றும் அமெரிக்க அதிபர் புஷ், இங்கிலாந்து பிரதமர் டொனி பிளேருக்கும் கொடுக்கப் பட்டிருக்கும் பாதுகாப்பை ஒன்றாக சேர்த்தால் இருக்கும் அளவைக் காட்டிலும் அதிக அளவு பாதுகாப்புடன் பின்லேடன் இருக்கிறார் என்று பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன. சதாம் உசேன் டெபாசிட் செய்துள்ள பணம் மற்றும் இதர சொத்து விபரத்தை மறைத்த அதிகாரிகள் மீதும் விசாரணை நடத்தப்படலாம் என்று தெரிகிறது.

# சார்க் நாடுகளின் மக்கள் நலனுக்கான சமூக சாசனம் கையெழுத்தானது!!

தெற்காசிய நாடுகளின் மக்கள் நலனுக்காக தயாரிக்கப்பட்ட சார்க் சமூக சாசனத்தில் 7 நாடுகளின் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.




பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் 12-வது சார்க் உச்சி மாநாடு நடைபெற்று வருகிறது. இம்மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய் உட்பட 7 நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.

தெற்காசிய கூட்டமைப்பில் உள்ள 7 நாடுகளின் மக்கள் நலனுக்கான 10 அம்ச சார்க் சமூக சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இந்த சாசனத்தில் 7 நாடுகளின் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

சமூக அபிவிருத்திக்காக மக்கள் ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை அமுல்படுத்துவது, மனிதர்களால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்வது, ஏற்றத்தாழ்வுகள் பார்க்காமல் அனைத்து மக்களின் உரிமைகளையும் நிறைவேறச் செய்வது, தெற்காசிய நாடுகளில் வறுமையை ஒழிப்பதற்கு முன்னுரிமை அளிப்பது, ஏழைகளுக்கு வருமானத்தைக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது உட்பட பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகளுக்காக இந்த சாசனம் உருவாக்கப்பட்டு கையெழுத் திடப்பட்டுள்ளது. இந்தச் சாசனத்தில் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லாகான் ஜமாலி, நேபாள பிரதமர் சூர்யபகதூர்தபா, வங்கதேசப் பிரதமர் பேகம் கலிதாஜியா, இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, மாலைதீவு ஜனாதிபதி அப்துல்கயூம், பூட்டான் பிரதமர் லியாங்கோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

# செவ்வாய்க் கிரகத்தில் அமெரிக்க விண்கலம்

## வான்வெளி ஆராய்ச்சியில் புதிய சாதனை

வான்வெளி ஆராய்ச்சியில் புதிய திருப்பம் நிகழ்ந்துள்ளது. செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கிய அமெரிக்க ராக்கெட் பூமிக்குத் தகவல் அனுப்பியுள்ளது. வான்வெளியில் சூரியனை சுற்றிவரும் 8 கிரகங்களில் புதன் மிகச் சிறியதா ஆகும். அதற்கும் சிறியது செவ்வாய் கிரகம்( மார்ஸ்). சிவப்பு நிறமாக தோன்றுவதால் இதனை செவ்வாய் என்று அழைக்கிறோம். இது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது.

செவ்வாய் கிரகமும், பூமியும் 400 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றாகத் தோன்றின என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கின்றனர். அங்கு பூமியைப் போல் உயிரினங்கள் உண்டா ? அல்லது மனிதன் அங்கு குடியேறலாமா ? அதற்கான வாய்ப்பு உண்டா ? என்ற ஆய்வு தீவிரமாக நடந்து வருகிறது.

இதற்காக 6 விண்கலங்கள் செவ்வாய் கிரகத்தை நோக்கி அனுப்பப்பட்டன. செவ்வாய் எக்ஸ்பிரஸ் ராக்கெட்டில் பீகிள் 2 என்ற விண்கலத்தை இங்கிலாந்து அனுப்பியது. ஆனால் அது நடக்கவில்லை. அந்த விண்கலத்தில் இருந்து எந்தத் தகவலும் வரவில்லை. விண்கலமும் என்ன ஆனது என்பது தெரியவில்லை.

இதற்கிடையே அமெரிக்க விஞ்ஞானிகள் முயற்சிக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளது. அமெரிக்கா அனுப்பிய ரோவள் என்ற ராக்கெட் செவ்வாய் கிரகத்தில் நேற்று தரையிறங்கிய தகவலை நாசா விண்வெளி ஆய்வுநிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள் ளனர்.

இந்த ராக்கெட் அமெரிக்க நேரப்படி நேற்றுமுன் தினம் இரவு 7.29 மணிக்கு (இந்திய நேரம் நேற்றுக்காலை 8.54 மணி) செவ்வாய் கிரக பகுதியை அடைந்தது. மணிக்கு 12,000 மைல் வேகத்தில் சென்ற இந்த ராக்கெட் செவ்வாய் கிரகத்தை அடைந்துள்ளது. அங்கு இருந்து தகவலும் அனுப்பியுள்ளது.

ராக்கெட் இறங்கியதும் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது. விஞ்ஞானிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இந்த மகிழ்ச்சிக்கிடையே திடீரென்று செவ்வாயில் இருந்து வந்த தகவல் துண்டிப்பு ஏற்பட்டது. எனவே ராக்கட்டுடன் தொடர்பு கொள்ளும் முயற்சியில் விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கினர். இந்திய நேரப்படி காலை 10.22 மணிக்கு ராக்கட் மீண்டும் தகவல் அனுப்பியது. உடனே விஞ்ஞானிகள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். மீண்டும் ஆராவாரம் செய்து தங்களது வெற்றியைக் கொண்டாடினர்.

## உலகச் செய்திகள்

# பாகிஸ்தான் விருந்தோம்பல் பண்பை பிரதமர் வாஜ்பாய் பாராட்டினார்!

பாகிஸ்தானின் விருந்தோம்பல் பண்பை பிரதமர் வாஜ்பாய் மனமாரப் பாராட்டினார். 12-வது சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் வாஜ்பாய் இஸ்லாமாபாத் சென்றுள்ளார். சார்க் மாநாடு நேற்று துவங்கியது. தலைநகரில் ஜின்னா மாநாட்டு மையத்தில் 7 நாட்டு தலைவர்களும், பிரதிநிதிகளும் குழுமி இருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றினார். அவர் பேசியபோது பல கட்டங்களில் கரவொலி விண்ணைப் பிளந்தது.



தனது உரையில் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானின் விருந்தோம்பல் பண்மை மனதாரப் பாராட்டினார். அவர் பேசியதாவது:-

இஸ்லாமாபாத்துக்கு நான் வந்து இறங்கியபோது விமான நிலையம் அருகே இந்த ஒரு விளம்பர பலகையை பார்த்தேன். அது என்னை மிகவும் கவர்ந்தது. நாம் இணைந்து செயல்பட்டால் இந்த உலகில் சிறந்த வாய்ப்புகளை பெற முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இது வெறும் கோசமாக எனக்குத் தெரியவில்லை. ஒரு ஆழமான நம்பிக்கையை அது வெளிப்படுத்தியுள்ளது. தெற்காசியாவில் இது முழுமையாகக் கவர்ந்து உள்ளது. இந்த மாநாட்டுக்கு பாகிஸ்தான் அரசு மிகச்சிறந்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

நமது பிரதிநிதிகளுக்கு அற்புதமான வரவேற்பையும் அளித்துள்ளது. இந்த விருந்தோம்பல் பண்புக்காக நான் பாகிஸ்தான் அரசை மனமாரப் பாராட்டுகிறேன். இவ்வாறு பிரதமர் பேசினார்.

முன்னதாக மாநாட்டில் கலந்து கொள்ள அவர் வந்தபோது ஜின்னா மையத்தில் அவரை பாக். பிரதமர் ஜபருல்லா கான் ஜமாலி வரவேற்றார். இருவரும் அருகருகே கம்பீரமாக நடந்து உள்ளே சென்றனர். மாநாட்டை முன்னிட்டு இந்த மையத்திலும், மையத்தை சுற்றிலும் 10,000 பொலிசாரும், துணை இராணுவ படையினரும் குவிக்கப்பட்டு இருந்தார்கள். இதற்கு முன்பாக பிரதமர் வாஜ்பாய் தான் தங்கியிருந்த ஷெரேனா ஹொட்டலிலிருந்து புறப்பட்டார். இந்த ஒட்டலுக்கும், மாநாட்டு மையத்திற்கும் குறுகிய தூரம்தான், இருப்பினும் இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட குண்டு துளைக்காத காரில் பிரதமர் பயணம் செய்தார்.

# 13வது சார்க் மாநாடு டாக்காவில் நல்லுறவை பேண இந்தியா- பாக் தலைவர்கள் விருப்பம்!

இந்தியா-பாகிஸ்தான் இடையே ஆன உறவை தொடர்ந்து பராமரிக்க இரு நாட்டு பிரதமர்களும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாகும்.

சார்க் மாநாட்டுக்காக இஸ்லாமாபாத் சென்றிருக்கும் பிரதமர் வாஜ்பாய் அங்கு அந்நாட்டு பிரதமர் ஜமாலியை தனியாக சந்தித்து 15 நிமிடம் பேச்சுவார்த்தை நடாத்தினார். முன்னதாக வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையிலும் இவர்களது சந்திப்பு நடந்தது. இவர்களது சந்திப்பிற்கு பிறகு இந்திய வெளியுறவு விவகாரத்துறை அமைச்சர் யஷ்வந்த்சின்ஹா நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது கூறிய அவர், இருதரப்பு உறவுக்கான சூழ்நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று இரு பிரதமர்களும் முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த 2 ஆண்டுகளாக இந்தியா-பாகிஸ்தான் போர் ஏற்படுமோ என்ற அச்சமான சூழ்நிலை நிலவி வந்தது. ஆனால் அந்த நிலை மாறி இப்போது நல்லுறவுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல்முறையாக இரு நாட்டு பிரதமர்களும் தனியாக சந்தித்துப் பேச்சுவார்த்தையும் நடாத்திவிட்டார்கள். இது ஒரு முக்கியமான திருப்பமாகக் கருதப்படுகிறது. இந்தச் சந்திப்பின் போது இந்தியா வரும்படி பாக். பிரதமர் ஜமாலிக்கு வாஜ்பாய் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று அவர் அடுத்த மாதம் டெல்லி வருகிறார். இரு நாட்டு பிரதமர்கள் சந்திப்பிற்கு பிறகு இந்திய வெளியுறவு அமைச்சர் சின்ஹா பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கசூரியை சந்தித்துப் பேசினார். அப்போது இரு தரப்பு உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இரு



வரும் திருப்தி தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து பராமரிப்பது எப்படி என்பதற்காக வழி முறைகளையும் அவர்கள் ஆலோசித்தனர். சார்க் அமைச்சர்கள் அளவிலான மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தியதற்காக கசூரியை தாம் பாராட்டியதாக சின்ஹா தெரிவித்தார். இதனிடையே பாக். அதிபர் முஷாரப்பை இன்று பிரதமர் வாஜ்பாய் மரியாதை நிமித்தமாக சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேற்றைய சார்க் மாநாடு சுமூகமாக தொடங்கியது. 2 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பதட்ட நிலையெல்லாம் மாறி இவ்வாறு சுமூகமாக மாநாடு தொடங்கி இருப்பது பல நாடுகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது.

# 12வருடத்தின் பின் புல்லுமலை மண்ணில் மீளக் குடியமரும் தமிழ் மக்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வளமிகு கிராமம் புல்லுமலை. மண்ணைக் கிளறக் கிளற செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் இக்கிராமத்தில் மா, பலா, வாழை ஆகிய முக்கனியும் பால், தேன், நெல், போன்றவையும். தேவைக்கேற்ப பெறக்கூடிய ஒரு தமிழர் பூமியாக இருந்தது.


ஆனால் கடந்த 1983ம் ஆண்டு தொடக்கம் 1990ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிங்களக் காடையர்களும், சிங்கள இராணுவத்தினரும் இணைந்து ஆங்காங்கே பல தடவைகள் ஏற்படுத்திய படுகொலைகள் இன அழிப்பு போன்றவற்றினால் தமது தொழில் மூலதனங்கள் முற்று முழுதாக அழிக்கப்பட்ட நிலையில் சுமார் 72க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அழிக்கப்பட்ட உறவுகள், சொத்துக்களையும் உடமைகளையும் விட்டு இடம் பெயர்ந்து உறுகாமம், கித்துள், மரப்பாலம், சின்னப்புல்லுமலை போன்ற பல கிராமங்களில் வாழ்ந்த நிலையில் தற்போது 12வருடத்திற்குப் பின் தமது மண்ணில் மீளக்குடியமர்வின் திட்டத்தில் காலடி வைத்தார்கள்.

மேற்படி புல்லுமலைக் கிராமத்தின் மீள்குடியமர்வினை நாம் நேரடியாகச் சென்று பார்த்த வேளை அம்மக்கள் இழந்த தமது சொத்துக்களை மீளப் பெற முடியாதுள்ளது. அவ்வாறு மீளப் பெறுவதாயின் பல வருடங்கள் தொடர்ந்தும் சமாதானம் நீடித்தால் தமது இழந்த சொத்துக்களை மீளப் பெறலாம்.

இதே வேளை் தற்போது 350 குடும்பங்கள் அளவில் மீளக் குடியமர்ந்து ள்ளனர். மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு தலா 25000 ரூபாய் வழங்கப்படுவதுடன் நெற் செய்கைக்கு நெல், மற்றும், நிலப் பசளை மண் வெட்டிகள் போன்றவையும் வழங்கப்படுகின்றன. அத்துடன் சேனைப்பயிர்ச்செய்கை செய்வதற்கும் விதைகள் உட்பட பசளை வகைகளும் வழங்கப்படுகின்றன.

எது எவ்வாறாயினும் புல்லுமலைப் பகுதி உண்மையில் 1983க்கு முன்பு இருந்த செல்வச் செஞ்சளிப்பு அற்று மயானத்தை விடவும் மோசமாக வெறிச் சோடிக் காணப்படுகின்றது.

இதே வேளை இப்பகுதி கிராம



அபிவிருத்திச் சங்கத்தலைவரும் கிராமிய புனர்வாழ்வுக் குழுத் தலைவருமான யூசமூர்த்தியோசப் அவர்களிடம் நேரில் வினாவிய போது:-

தமக்கு எவ்வாறான விவ சாயப் பொருட்கள் வழங்கப்பட்டாலும் வயலில் இறங்கி வேலை செய்ய முடியாத அளவிற்கு சிங்கள இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் தடையாக உள்ளதாகவும் இது வரையில் மக்களினால் 100க்கும் மேற்பட்ட மிதிவெடிகள் கண்டுபிடித்து ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்த யோசப் பொது மக்கள் எவருக்கும் ஆண்டவன் துணையினால் மிதிவெடியினால் பாதிப்பு ஏற்படவில்லையெனவும் தெரிவித்தார்.

இதே வேளை மிதிவெடி உள்ள இடங்கள் கண்டுபடிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய இடங்களிலே மக்கள் கண்டு பிடித்தனர். பொதுவாக வழிபாட்டுத் தலங்கள், மரநிழல்கள் போன்ற பொதுவான இடங்களில் மிதிவெடிகள் கூடுதலாக உள்ளதாகவும் இவற்றை முழுமையாக அகற்ற உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றனர். அத்துடன் காட்டுயானைகளின் தொல்லை கூடுதலாக இரவு, பகல் எல்லாம் உள்ளதாகவும் தமக்கு பாதுகாப்பு வழங்குவதென்றால் விடுதலைப்பு



லிகள் மாத்திரமே இரவு பகலாக உள்ளார்கள் என்றும் தாம் இவ்விடத்தில் மீளக் குடியமர விடுதலைப்புலிகளே காரணம் என்றும் அவர்கள் தங்களைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை தமக்குப் பூரணமாக உள்ளதாகவும் அவர்கள் கூறியதாக அவர் தெரிவித்தார்.

(2) இதேவேளை புல்லுமலை, செபமாலை மாதா ஆலயம் அருகிலுள்ள குடும்பஸ்தரான த.ஞானசிங்கம் என்பவரிடம் சில விடயங்கள் கேட்டறிந்தோம். தமது பகுதியில் தற்போது எவ்வித பொதுக் கட்டிடமும் இல்லை. அதனால் பொதுக் கூட்டங்கள் நடாத்துவது என்றால் ஆலயத்திலே நடாத்துவார்கள் அங்கேயும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. ஆனால் மிதிவெடி உள்ள இடமாக இவ்வாலயம் தெரிவு செய்யப் படவில்லை எனத் தெரிவித்தார்.

(3) இது இப்படி இருக்க நாம் புல்லுமலையில் இடம் பெயர்வுக்கு முன்னர் சகல வசதிகளுடனும் போடியார் என்று விவ சாய செய்கையில் சிறந்து விளங்கியது டன் தமது வயலில் பல தொழிலாளர்களுக்கு தொ ழில் வழங்கிய காலம் சென்ற கி.தங்கராசா (போடியார்) அவர்களுடைய குடும்பத்தையும் பழைய வீட்டின் தோற்றத்தையும், தற்போதைய வீட்டின் தோற்றத்தையும் பார்த்தோம். உண்மையில் இடம் பெயர்வுக்கு முன்பு தற்போதைய பெறுமதியில் 10லட்சம் ரூபாய் பெறுமதியான பிரமாண்டமான வீடுகள் அழிக்கப்பட்ட நிலையில் பெரும் பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன. மிகவும் சந்தேசமாக வாழ்ந்த குடும்பங்கள் தற்போது அதற்குப் பக்கத்தில் ஒரு சிறிய குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார்கள்.

(4) தங்கராசா போடியார் அவர்களின் மனைவியான சி.கங்கேஸ்வரி அவர்களை நேரில் சென்று வினாவினோம். தமது குடும்பம் சகல வசதிகளுடனும் புல்லுமலையில் வாழ்ந்தது என்றும், சகல வசதிகளுடனும் வாழ்ந்தோம். பெரிய வீடு கள் இருந்தது. பரந்த வயல் நிலங்கள் இருந்தது. ஆனால் இவை எல்லாம் இழந்த நிலையில் தற்போது உள்ளேன். வீடுகள் உடைக்கப்பட்ட நிலையிலும், வயல் நிலங்களில் மிதிவெடிகள். இப்படி இருக்கும் போது தற்போது என்னிடம் உள்ளது பேரப் பிள்ளைகள் மாத்திரம் தான் எனத் தெரிவித்தார்.

அத்துடன் மீளக்குடியமர்த்தப்பட்ட தங்களுடைய வாழ்க்கை நிலை உண்மையில் பெரும் சிரமத்திற்கு மத்தியில் உள்ளதாகவும் தமது வீடு வளவுகளை தாண்டி எந்த ஒரு நிலத்திலும் பயம் அற்ற உணர்வுடன் சேனைப் பயிர்ச் செய்கையும் செய்ய முடியாதுள்ளது. இந்நிலையில் மிதிவெடிகளை அகற்றி எம்மை சுயமாகத் தொழில் செய்ய மனித நேய அமைப்புக்கள் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை மீளக் குடியேறிய இம் மக்களுக்காக இப்பகுதியில் வைத்தியசாலைகள் எதுவும் இல்லை. அவ்வாறு வைத்தியசாலைக்குச் செல்வதாயின் செங்கலடிக்குத் தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இது இவ்வாறு இருக்க வன்செயலுக்கு முன்பு இருந்த றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்ட தனால் தற்போது குடி யேறிய குடும்பங்களில் உள்ள மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதே வேளை மேற்படி கிராமத்தில் பாலர் பாட சாலை ஒன்று நடாத்தப்படுகின்றது. இருந்த போதிலும் பொதுவான பாடசாலை விரைவாக ஆரம்பிக்க கல்வித்திணைக்களம் கவனம் செலுத்தாது போனால் இக்கிராமத்தின் கல்வி நிலை முற்று முழுதாகப் பாதிக்கப்படும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இந்நிலையில் மேற்படி கிராமத்தில் அகதி முத்திரைகள் வழங்கப்படுவதுடன் சமுர்த்தி முத்திரையும் வழங்கப்பட்டு வருகிறது. இருந்த போதிலும் இவர்களால் வாழ்க்கை நடாத்த முடியாதுள்ளது. என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தமது சொந்தப் பிரதேசத்தில் வயல் செய்கை பூரணமாக செய்ய முடியாத நிலையில் உள்ளது. காரணம் வயல் நிலங்களில் உள்ள மிதிவெடிகளைப் பூரணமாக அகற்றாவிட்டால் சுயமாக தொழில் செய்ய முடியாது என்பது உண்மை.

சொந்த மண்ணைவிட்டு அப்புறப்படுத்த பேரினவாதிகள் எடுத்த முயற்சிகளின் பயனாக தமது உறவுகள் இழக்கப்பட்டன. எத்தனையோ படுகொலைகள் பதிவு செய்யப்பட்டன. வீடுகள் உடைந்து தீக்கிரையாக்கப்பட்டன. இதற்கும் மத்தியில் விடுதலைப்புலிகளின் அயராத முயற்சி காரணமாகவும் அவர்களுடைய பாதுகாப்பின் பயனாலும் நாம் அந்த மண்ணிலே இறுதிவரை வாழ ஆசைப்படுகின்றோம். எனத் தெரிவிக்கும் இம் மக்கள் தமக்கு உதவிக்கரம் நீட்ட மனித நேய அமைப்புக்கள் அரசாங்கத்தின் உதவிகள் வழங்கப்பட வேண்டும். எனவும் கோருகின்றனர்.

*ச.நல்லரெத்தினம்.*

## மரப்பாலம் அறநெறி பாடசாலைக் கட்டிடம் இடிந்து விழும் அபாயம். பிள்ளைகளை அனுப்ப பெற்றோர் அச்சம்

ஏறாவூர்ப் பற்று பதுளை வீதியில் உள்ள மரப்பாலத்தில் லயன்ஸ் கழகத்தினால் அமைக்கப்பட்ட கட்டிடத்தில் கொய்னொனியா அமைப்பினால் அறநெறி வகுப்புகள் சுமார் 30மாணவர்கட்கு மதிய உணவுத்திட்டத்துடன் நடைபெறுகின்றது.

இந்நிலையில் மேற்படி பாடசாலை நடைபெறும் கட்டிடத்தில் கதவுகள், யன்னல்கள் எதுவும் இன்றி கட்டிட மேற்கூரை இறங்கிய நிலையில் தூண்கள் யாவும் வெடித்து உடைந்த நிலையில் உள்ளது.

இப்படி கட்டிடம் உடைந்த நிலையில் இருக்கும் போது தமது பிள்ளைகளை எப்படி நம்பி அனுப்புவது. நிறுவனம் மேற்கொள்ளும் திட்டம் மிகவும் நல்ல விடயம். ஆனால் பிள்ளைகளின் பாதுகாப்பு மிகவும் அவசியம் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இது இவ்வாறு இருக்க பாடசாலைக் கட்டிடம் வெறும் பற்றைக் காடுகளாக வெளிப்புறம் காட்சி தருகின்றது. வகுப்பு நடைபெறாத நேரங்க ளில் மாடு, ஆடுகள் உள்ளே இருக்கின்றன. சுற்று வேலிகள் கூட இல்லை.

இது தொடர்பாக நாம் பாடசலை அருகிலுள்ள குடும்ப பெண்ணான மா.ஜோதிமலர் என்பவரிடம் கேட்டபோது, தனது பிள்ளையும் பாடசாலைக்குச் செல்வதாகவும் இது மிகவும் நல்லதோர் திட்டம். ஆனால் கட்டிடம் திடீரென உடைந்து விழுந்தால் பிள்ளைக ளுக்கு ஆபத்து வரலாம் எனவே உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். எவ்வாறாயினும் வெள்ளம் வருமுன் அணையைக் கட்டுவது பொருத்தமானது. இதே வேளை இங்கு மலசல கூட வசதிகள், குடிநீர்க் கிணறுகள் அவசியம் அமைக்கப்பட வேண்டும் எனவும்தெரிவித்தார்.

# இந்திய துடுப்பாட்ட வீரர்களிடமிருந்து அவுஸ்திரேலியா அணி கற்றுக்கொள்ள வேண்டும்.

*~ஜஸ்டின் லாங்கர்~*

இந்திய துடுப்பாட்டவீரர்களிடம் இருந்து ஆஸ்திரேலிய அணி நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் என்று அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஜஸ்டின் லாங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான 4-வது டெஸ்டில் முதல் இன்னிங்சில் லாங்கர் அடித்த சதமானது இந்த தொடரில் அவர் அடிக்கும் 2-வது சதமாகும். இதற்கு முன்பு இப்படியொரு நெருக்கடியை தான் சந்திக்கவில்லை என்று கூறிய லாங்கர் இதுகுறித்து அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளதாவது:-

'இந்திய அணியின் துடுப்பாட்டவீரர்கள் மிகப் பொறுமையுடன் விளையாடுகின்றனர். துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் விளையாட்டு வியப்பளிப்பதாக, அற்புதமாக உள்ளது. எங்களுக்கு தற்போது ஏற்பட்டு இருக்கும் நெருக்கடியை போன்று இதற்கு முன் நான் அனுபவித்தது இல்லை. துடுப்பாட்டம் பந்து வீச்சு என்பனவற்றில் மிகப்பெரிய ஸ்கோரை 'சேஸ்' செய்வது போன்ற நெருக்கடிகள் இந்த தொட்ரில் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று கூறிய லாங்கர் இந்த தொடரில் இந்திய அணியின் துடுப்பாட்டந்தான் ஹைலைட்டான விஷயம் என்று கூறினார். இந்த தொடரில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில் இந்திய அணியின் துடுப்பாட்டந்தான். துடுப்பாட்டத்தில் இந்தியாவிடம் இருந்து நாங்கள் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும். இரண்டு நாட்கள் முழுவதுமாக களத்தடுப்பு செய்தது எனது துடுப்பாட்டத்தை பாதித்துவிட்டது. எனது கிரிக்கெட் வாழ்வில் முதன்முறையாக துடுப்பாட்டம் பற்றி கவலைப் படுவதை விடுத்து, நேரத்தை பற்றி கவலைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கு முன்பு என்னுடைய கிரிக்கெட் வாழ்வில் இப்படி நடைபெற்றதில்லை. எங்களுக்கு இது வழக்கத்திற்கு மாறான ஒன்றாகும் என்று லாங்கர் கூறினார். லாங்கர் மேலும் கூறுகையில், நேரத்தை கடத்துவதை விடுத்து ஓட்டக் குவிப்பில் நாங்கள் ஈடுபட்டோம். இதுதான் எங்களது இயல்பான விளையாட்டு. ஓட்டங்களைக் குவிக்காமல் நேரத்தை கடத்துவது போல் விளையாடினால் நெருக்கடிதான் அதிகரிக்கும். இது எதிரணிக்கும் சாதகமாகிவிடும். ஆனால், கும்ப்ளேயின் பந்தையும் அடித்து விளையாடி இருந்தால், எங்களுக்கு பிரச்சினை ஏற்பட்டு இருக்கும். சர்வதேச தரம் மிக்க பந்து வீச்சாளரான கும்ப்ளேயின் பந்தை அடித்து விளையாடினால் பிரச்சினை எங்களுக்குத்தான் என்று கூறிய லாங்கர் இளம்வீரர் இர்பான் பதானை மனமார பாராட்டினார். இந்த டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற இருக்கும் ஸ்டீவ்வாஹ், 2-வது இன்னிங்சில் தனக்கே உரிய பாணியில் சிறப்பாக விளையாடி, போட்டியை சமநிலையில் முடிக்க கடினமாகப் போராடுவார் என்றும் லாங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

## பரபரப்பான கட்டத்தை அடைந்திருக்கும் இந்திய-ஆஸி டெஸ்ட்

இந்திய அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே சிட்னி நகரில் இடம் பெற்றுவரும் நான்காவதும் இறுதியுமான டெஸ்டின் நான்காம் நாள் ஆட்ட முடிவில் போட்டியானது விறு விறுப்பான கட்டத்தை அடைந்துள்ளது. முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது 7 விக்கட் இழப்பிற்கு 705 ஓட்டங்கள் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது இதில் சச்சின் டெண்டுல்கார் ஆட்டமிழக்காது இரட்டைச் சதத்தையும், லக்ஸ்மன் சதத்தையும் பூர்த்தி செய்தனர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 474 ஓட்டங்களைப் பெற்றது இதில் ஜஸ்டின் லாங்கர் கட்டிச் ஆகியோர் சதங்களைப் பெற்றுக் கொடுத்தனர் பந்து வீச்சிலே இந்திய அணி சார்பிலே அணில் கும்பிளே 141 ஓட்டங்களுக்கு 8 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.இந்நிலையில் தொடர்ந்தும் பொலோ என் முறையில் அவுஸ்திரேலய் அணியைத் துடுப்பெடுத்தாடப் பணிக்கும் வாய்ப்பு இருந்த போதும் அதனை விடுத்து இரண் டாவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணி 211 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களை இழந்தது இதில் ட்றாவிட் ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களையும் சச்சின் ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களையும் பெற்றனர். இதனடிப்படையில் 443 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி ஒரு நாள் மாத்திரமே எஞ்சியுள்ள நிலையில் அவுஸ்திரேலிய அணி 433 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது

# மார்ச் மாதம் இந்திய அணி பாகிஸ்தான் செல்கின்றது.

*-டால்மியா அறிவிப்பு-*


இந்திய கிரிக்கெட் அணி வரும் மார்ச் மாதம் பாகிஸ்தான் பயணம் மேற்கொள்ளும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) தலைவர் டால்மியா அறிவித்துள்ளார்.

வரும் மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இந்த தொடர் நடை பெறும் என்றும், மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாட இந்திய அணி பாகிஸ்தான் செல்வதாகவும், இந்த தொடருக் கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பாகிஸ்தானுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யும் என்றும் டால்மியா தெரிவித்தார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு செயற்குழு கூட்டம் நேற்று கொல்கத் தாவில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு பின்னர் பேட்டி யளித்த டால்மியா கூறுகையில் பாகிஸ்தானில் இருந்து திரும்பிய பின்னர் இந்திய அணி, வங்க தேசம் செல்லும் வங்கதேச அணிக்கு எதிராக 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் இந்தியா விளையாடும். அதன் பின்னர் இந்திய வீரர்களுக்கு இரண்டு மாத ஓய்வு அளிக்கப்படும். ஜூலையில் ஆசியகோப்பை போட்டியில் இந்தியா கலந்து கொள்ளும், அடுத்தாக ஆகஸ்ட் மாதத்தில் இந்தியா, பாகிஸ்தான், அவுரேலியா அணிகள் மோதும் முத்தரப்பு தொடர் நடை பெற உள்ளது. இந்த போட்டிக்கான இடம் இன்னும் முடிவு செய்யப்பட வில்லை. ஸ்கொட்லாந்து, அயர்லா ந்து அல்லது ஹாலந்தில் இந்த முத்தரப்பு தொடர் நடைபெற வாய்ப்பு இருக்கிறது என்று டால் மியா தெரிவித்தார். வரும் செப்டம்பர் மாதம் 10-ம் த!க்தி துவங்கவிருக்கும் சாம்பியன் டிராபிக்கு முன்னதாக 1,3 மற்றும் 5 திக்திகளில் இங்கிலாந்துக்கு எதிராக 3 ஒருநாள் போட்டிகளில் இந்தியா விளையாட உள்ளதாகவும் டால்மியா தெரிவித்தார்.

## விளையாட்டுச் செய்தி

# ஓட்டங்கள் அதிகளவில் குவிப்பு எனது வேலையை இலகுவாக்கியது.

முதல் இன்னிங்சில் இந்திய அணி மிகப்பெரிய ஸ்கோரை எட்டியது தனது வேலையை எளிதாக்கியதாகவும், அதே சமயம் அயல்நாட்டு தொடர்களில் பயனுள்ள முறையில் எப்படி பந்து



வீசுவது என்பதை கற்றுக் கொண்டுவிட்டதாகவும் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான அனில் கும்ளே தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடைபெற்று வரும் 4-வது டெஸ்ட் போட்டியில் சச்சின்' இலக்ஸ்மன இருவரது அபார ஓட்டகுவிப்பின் உதவியுடன் இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 705 ஓட்டங்களைக் குவித்தது. இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலிய அணியில் வீழ்ந்த 6 விக்கெட்டுகளில் முதல் 4 விக்கெட்டுகளை கும்ளே வீழ்த்தினார். இதனால் அவுஸ்திரேலிய. மண்ணில் முதன்முறையாக தொடரை வெல்லும் நம்பிக்கை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் விளையாடாத கும்ளே, அடுத்து நடைபெற்ற போட்டிகளில் விளையாடி சிறப்பாக பந்து வீசி, அணிக்கு தேர்வு செய்யப்பட்டதை நியாயப் படுத்தி உள்ளார்.




## கிழக்கு வழி திறக்க வில்லை ஏன்?

வடபகுதியில் காணாமல் போனோர் உறவினர்கள் அண்மையில் கொழும்பு வரை சென்று தமது போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகை வரை சென்று போர்க்கொடி தூக்கியுள்ளனர். இவ்விடயம் தற்போது சர்வதேச மட்டத்தில் பிரபல்யம் அடைந்து விட்டது. இது வரவேற்கத்தக்க விடயம்

ஆனால் கடந்த போர்ச்சூழலில் தென்தமிழீழத்தில் தான் அதிக படுகொலைகள் நிகழ்ந்துள்ளது. அதிகமான உயிர் அழிவுகளைச் சந்தித்த இந்த மண்ணில் நடந்த படுகொலைகள் தொடர்பாக இன்னும் ஒரு சங்கமோ அல்லது அமைப்போ நிறுவப்படவில்லை என்பது துரதிஷ்டம்.

இன்று வட பகுதியில் காணாமல்போனோர் உறவினர்கள் கொழும்பு வரை சென்று ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தும் போது கிழக்கு வாழ் தமிழர்கள் தமது உறவுகளை இழந்தும் ஏன் மௌனம் சாதிக்கின்றனர் என்பது வேதனை தரும் விடயம்.

கிழக்கு வாழ் தமிழர்களும் காணாமல் போனோர் தொடர்பாக ஒரு அமைப்பை நிறுவி தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அல்லது வடபகுதியில் காணாமல் போனோர் உறவினர்கள் சங்கத்துடனாவது இணைந்து இந்தப் பணியினைச் செய்ய முன்வர வேண்டும் என்பதே எமது அவா.

*பாதிக்கப்படும் தமிழ் மக்கள்*

## மட் -வாழைச்சேனை பஸ் சேவை சீர்கேடு

மட்டக்களப்பு வாழைச்சேனை பஸ் போக்குவரத்தில் அதிகாலையில் தொடர்ந்துஅசமந்தப் போக் கே காணப்படுகிறது. தினமும் பய ணிகள் பஸ் சேவையின் சீர்கேடுகளைப் பார்த்து மனம் நொந்தவர்களாகப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

அதிகாலையில் வாழைச்சேனையிலிருந்து புறப்படும் பஸ் வண்டி மட்டக்களப்பை ஆறு மணிக்குச் சென்றடையக்கூடிய வகையில் பஸ் போக்குவரத்து நடைபெறுவதில்லை.

மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் செல்லும் பயணிகள் பஸ் சேவை சீர்கேடு காரணமாக காலை 7.30 மணிக்கே வைத்தியசாலை சென்றடைய வேண்டியுள்ளது.

இத்தகைய ஒரு துர்ப்பாக்கிய நிலை காரணமாக வைத்திய சேவை பெறுவதில் இப்பிரதேச மக்கள் பெருஞ்சிரமப்படுகின்றனர்.

காத்தான்குடி, ஏறாவூர் உபபஸ் டிப்போக்கள் மக்கள் நலன் கருதி குறுந்தூர பஸ் சேவையை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு நடாத்தி வரும் சூழ்நிலையில் இவ்வாறு மட்டக்களப்பு - வாழைச்சேனை பஸ் சேவை சீர்கேடு நிலவுவது தவிர்க்கப்பட வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

*இ. பரமநாதன்*

## கலாசார விழா நடைபெற அனைவரது ஒத்துழைப்பும் வேண்டும்.

10.12.2003ஆம் திகதி தமிழ் அலையில் பட்டிப்பளையில் எப்போது கலாசார விழா என்கின்ற தலைப்பில் செய்தி ஒன்று வெளியாகியிருந்தது.

ஆனால் இது சம்பந்தமாக தொடர்புபடுத்தும் உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச கலாசார பேரவை உறுப்பினர்களை இது சம்பந்தமாக கூட்டத்திற்கு சமூகமளிக்கும் படி பலமுறை கேட்டிருந்தும் அவர்கள் அக்கறையுடன் சமூகமளிக்காமையே இவ்விழா நடாத்தப்பட முடியாமைக்குரிய காரணமேயன்றி வேறல்ல.

இது சம்பந்தமாக உத்தியோகத்தர்கள் இவ்விழாவை சிறப்பாக பொலிவுற நடாத்த வேண்டுமென்பதில் மிகுந்த வாஞ்சையுடைய வர்களாக இருக்கின்றார்கள்.

ஏனவே இப்பிரதேச கலாசார விழா கட்டாயம் 2004ல் மிகச் சிறப்பாக நடாத்தப்பட வேண்டும் என்பதில் சகலரினதும் கூட்டு முயற்சி சம்பந்தப்பட்டுள்ளது என்பதை இச்செய்தியோடு சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

*திரு. ச. சோமசுந்தரம்,*
*கலாசார உத்தியோகத்தர்.*

*அன்புடன் வாசகர்களுக்கு!*

*எமது தாயக மண்ணின் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், இன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூட்டி வைக்க வேண்டாம்.*

*தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் "அலையின் தேடல்" பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*

*எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

தமிழ் அலை
Tamilalai
தினசரி

# களுவாஞ்சிகுடியில் சுயதொழில் கடன் வசதி

(எஸ்.ரவீந்திரன்)

என்.டி.ரி.எவ். இன் நிதி ஒதுக்கீட்டில் நேத்ரா நிறுவனம் சுயதொழில் கடனுதவித் திட்டமொன்றை களுவாஞ்சிகுடியில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

களுவாஞ்சிகுடி பெண்கள் சுதந்திர அபிவிருத்தி கழக அங்கத்தவர்களுக்கு இக்கடன் வசதி வழங்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 10. மணிக்கு களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறும் வைபவத்தில் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளதாக களுவாஞ்சிகுடி பெண்கள் சுதந்திர அபிவிருத்தி கழக இணைப்பாளர் துஷாந்தி தெரிவித்தார்.

# களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள. களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பெருமளவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.வசீகரன் கருத்து வெளியிடுகையில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் நாளொன்றுக்கு 1000 நோயாளர் வரையில் சிகிச்சை பெறுவதாகத் தெரிவித்தார்.

பணம் செலுத்தி மருந்துகளை வாங்க முடியாத ஏழை மக்கள் இந்த வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள மருந்து வகைகளின் பற்றாக்குறை காரணமாக பெருமளவு கஸ்ரங்களை எதிர் நோக்கியுள்ளார்களென்றும் அவர் குறிப்பிட்டார்.

களுவாஞ்சிகுடி - படுவான்கரை பகுதியில் வாழும் மக்கள் இந்த வைத்தியசாலையிலே தங்களது நோய்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்கின்றார்கள். களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் மருந்துவகைகளுக்கு பெருமளவு தட்டுப்பாடு ஏற்பட்டுவருவது காரணமாக தனியார் மருந்தகங்களில் மருந்து வகைகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தருகையில் ஏழை நோயாளர்கள் பலர் பணம் செலுத்தி மருந்து வாங்குவதற்கு இயலாத நிலையில் வெறுங்கையுடன் வீடு திரும்புகிறார்கள்என்று தெரிவித்தனர்.

# முஸ்லிம்களின் அபிலாசைகளுக்கு கை கொடுக்கும் சக்திகளுக்கு நாம் ஆதரவு வழங்குவதுதான் சிறந்தது

**-அன்வர் இஸ்மாயில்**

(ஏ.எல்.எம்.சலீம்)

''முஸ்லிம்களின் அபிலாசைகளைப் புரிந்து கொள்கின்ற சக்திகளோடு நாம் கை கோர்ப்பதைத் தவிர எதிர்காலத்தில் வேறு வழிகளில்லை''

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் கூறினார்.

நிந்தவூர் பாத்திமா பாலர் பரிபாலன நிலையத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டிய கலை விழாவுடன் கூடிய பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

நிலையப் பணிப்பாளரும் இலங்கை வங்கி உத்தியோகத்தருமான எம்.ஐ.எஸ். அகமட் தலைமையில் ஒலுவில் அல் ஹம்றா மகாவித்தியாலய அஷ்ரப் ஞாபகர்த்த மண்டபத்தில் விழா நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

''நாட்டில் அரசியல் போட்டிகள், அதிகாரப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று தேசிய அரசியலில் ஜனாதிபதியும், பிரதமரும் முரண்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் எவ்வாறு முஸ்லிங்கள் இந்த நிலைமையை பார்க்க வேண்டுமென்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற இந்த முரண்பாடுகளை பொறுத்த வரையில் முஸ்லிம் சமுதாயம். எந்த விதமான அதிர்ச்சியையும் எவ்வித கவலையையும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை

இந்த நாட்டிலே ஒரு கட்சியின் தலைவர் பிரதமராகவும், மற்றொரு பிரதான கட்சியின் தலைவர் ஜனாதிபதியாகவும் இருக்கும் வரையில் தான் வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

இரு அரசியல் தலைமைகளும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இச் சந்தர்பத்தில் இருப்பார்களே ஆனால் இன்று விடுதலைப் புலிகளுக்கு தட்டிலே முஸ்லிம்களைத் தாரைவார்த்துக் கொடுக்கும் கைங்கரியம் நடந்திருக்கும்.

எமது மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் வியூகத்தினால் உருவாகிய ஜனாதிபதி இன்று மறுதரப்பாக இருக்கும் காரணத்தினால் தான் ஓரளவு நிம்மதியோடும் பாதுகாப்போடும் இருக்கக் கூடிய சூழ்நிலையுள்ளது. அதற்காக பிரதமரை நாம் குறைகூறவில்லை இருந்த போதும் கடந்த இரண்டு வருடங்கள் இந்த நாட்டு அரசும் பிரதமரும் எவ்வாறு முஸ்லிம்களில் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதை சீர் தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

நாம் இந்த அரசோடு விவாகரத்து செய்யவேண்டும் என்றிருந்தால் அதற்காக நூற்றுக்கு மேற்பட்ட காரணங்களை நாம் எடுத்துக் கூறமுடியும்.

இருந்த போதிலும் முஸ்லிம் சமுதாயம் தொடர்ந்தும் ஆட்சிகளைப் புரட்டுகின்ற அற்ப சலுகைகளுக்காகத் தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்கின்ற சமுதாயமாக வரக்கூடாது என்ற காரணத்தினால் தான் இன்றும் பொறுமையாக நாம் இருந்து வருகிறோம்.

எனினும் எஞ்சியிருக்கும் காலம் எமக்கு முக்கியமானதாகும். இன்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏற்பட்டுள்ள பிணக்குகள் கூட தேசிய அரசியலில் ஏற்பட்ட பிணக்குகளல்ல அவை இன்னும் அவர்களுக்குள்ளே கௌரவப் பிரச்சனையாகவே மாறியுள்ளது.

அந்த கௌரவப் பிரச்சனையின் மூலம் இன்னுமொரு பொதுத் தேர்தல் வரும் போது மீண்டும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை கொடுக்க மறுக்கின்ற போது என்ன நடை பெறுமென்பதைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

அல்லது மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வரும் பொழுது ஆசனங்களின் எண்ணிக்கைகள் மாறுபடுகின்ற பொழுது எவ்வாறு ஆட்சி அமைப்பது என்பதில் பிரச்சனை வரும் பொழுது முஸ்லிம்களிடம் இருக்கின்ற இந்த ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்திகளெல்லாம் இன்று மாற்றமடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று தமிழ்த் தரப்பு தேர்தல் ஒன்று மீண்டும் வரவேண்டுமெனக் கேட்பதெல்லாம் எதிர்காலத்தில் தமிழர்கள் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக இப் பிரதேசத்தில் இந்த மண்ணில் மாற வேண்டுமென்பதற்காகவே என்பதை நாம் உணர வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் பதினைந்து ஆசனங்களைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் படுத்தும் பாடு, முஸ்லிம் சமுதாயம் தொடர்பில் போடும் முட்டுக்கட்டைகள் எல்லாவற்றையும் நாம் சகித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் மற்றொரு தேர்தல் மூலம் விடுதலைப் புலிகள் அல்லது அவர்கள் சார்ந்தவர்கள் பாராளுமன்றத்துக்குள் வந்தால் எவ்வாறு முஸ்லிம்களின் எதிர்காலம் அமையுமென்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

நாம் இன்று இக்கட்டான கால கட்டத்திலுள்ளோம். நமது அரசியல் வாதிகளெல்லோரும் தமது பகைமைகளை மறந்து ஒற்றுமைப்பட வேண்டிய கால கட்டத்திலுள்ளோம்.

நமது ஊடகவியலாளர்கள் வன்னி சென்ற போது புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் செல்வனும் முஸ்லிம்களை ஒற்றுமைப் படுத்துமாறு கூறியிருக்கின்றார்.

1989ம் ஆண்டு முஸ்லிம்களை ஒற்றுமைக்கு முன்னுதாரணமாகக் காட்டினார்கள்.

1989,1994ம் ஆண்டுகளில் மரச்சின்னத்தால் தேர்தலில் போட்டியிட்டு நாம் ஒற்றுமையைக் காட்டிய போது தமிழர்கள் எல்லோரும் அஷ்ரபின் ஒற்றுமைச் சக்தியைப் பாருங்கள் அஷ்ரப் சார்ந்த சமூகத்தின் ஒற்றுமையைப் பாருங்களெனக் கூறினார்.

எனவே எமது அரசியல் தலைமைகளிடையேயான ஒற்றுமையைப் பொதுமக்கள் இளைஞர்கள் வன்மையாக வற்புறுத்த முன்வர வேண்டும்.

எம்மைப் பொறுத்த வரை பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒன்றுதான், ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்றுதான்.

முஸ்லிம் களின் அபிலாஷை களைப் புரிந்து கொள்கின்ற சக்திகளோடு நாம் கைகோர்ப்பதைத் தவிர எதிர் காலத்தில் வேறு வழியில்லை.

மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப் நாசுக்காக எவ்வாறு எதிர் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை முடிவுகளெடுக்க வேண்டுமெனச் சொல்லியிருந்த போதிலும் அந்த முடிவுகளில் இருந்து வழுகியதன் காரணமாக இன்று நாம் சிரமங்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

இருந்தும் இன்னும் காலம் கடந்து விடவில்லை. எதிர்வரும் காலத்தில் காத்திரமான, உறுதியான முஸ்லிம்களை பாதுகாக்கக்கூடிய சக்தி யாரென்பதை அடையாளம் கண்டு அதற்கு ஆதரவு வழங்க நாம் தயாராக வேண்டும்.

எமது சிறார்களையும் நாம் எதிர்காலம் தொடர்பாக விழிப்போடு உருவாக்க வேண்டிய நிலையுமுள்ளது.

இவர்களைப் போராட்ட உணர்வுமிக்கவர் களாக, உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்.

நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல்.எம்.அமீன் அட்டாளைச்சேனை கோட்டககல்வி அதிகாரி ஐ.மீராசாகிபு உட்பட பலர் உரையாற்றினர்.

### கிழக்குப்....

முகமாக ஏற்பாட்டுக் குழு நேற்றையக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி இக்குழுவின் இணைப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராசசிங்கம், ஞா.கிருஸ்ணபிள்ளை, த.தங்கவடிவேல், அ.சந்திரநேரு, உபவேந்தர் மா.செ.மூக்கையா அரச அதிபர், இ.மோனகுருசாமி, கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் இரா.துரைரெத்தினம், மாநகரசபை ஆணையாளர் எஸ்.நவநீதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆர்.தயாபரன், மட்டக்களப்பு இந்து ஆலய ஒன்றியத் தலைவர் க.ஆறுமுகம் உட்பட பலர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்திற்கு அம்பாறை மாவட்ட இந்து ஆலய ஒன்றியத்தின் தலைவர் சிவஞானமூர்த்தி இணைப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அருள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செயற்பாட்டு குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

இதேவேளை மட்டக்களப்பிலும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இணைப்புச் செயலகங்கள் இரண்டும் திறக்கப்படவுள்ளன.

பொங்குதமிழ் தொடர்பான உணர்வாளர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் என்பவற்றை பெற்றுக் கொள்ளவும், மேலதிக தகவல்களை பொதுமக்கள் அறியும் வகையில் இவை திறக்கப்படவுள்ளதாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் இணைப்புச் செயலகத்துடன் தொடர்புகொள்ள விரும்புவோர் ராஜன் சத்தியமூர்த்தி, திருமலை வீதி, மட்டக்களப்பு எனும் முகவரியுடனும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொடர்புகொள்ள விரும்புவோர் அருள், மாணவர் ஒன்றியத் தலைவருடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2004ம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் முதலாக நடைபெறும் இப்பொங்குதமிழ் நிகழ்வில் பெருமளவு மக்கள் ஒன்று கூடி தமது உணர் வுகளை வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பதின்மூன்று...

இதேவேளை சுமார் 150 மாணவர்கள் கல்வி பயிலும் இப் பாடசாலையில் 1 தொடக்கம் 5ம் ஆண்டு வரை வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.'

நேற்று முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், தண்ணீர் போத்தல்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

### செய்தி சேகரிக்க...

போது அவர்கள் அனும திக்கப்படவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு படை அதிகாரி ஊடக வியலாளர் தவச்செல்வனை பார்த்து ''உன்னை சுடுவேன்'' என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

### வாழைச்சேனையில்...

நிறுத்திவிட்டு மாணவர்களை கடுமையாக தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் மாணவன் ஒருவன் சாரதியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்.

63-0201 பஸ் வண்டியின் நடத்துனரும் சாரதியும் காவத்தைமுனை முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து சிறிது நேரம் பதற்றம் நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சிறிலங்கா பொலிசாரிடம் முறையிடப்படவில்லை.

### களுவாஞ்சிகுடி...

கப்பட்டிருந்தது எனினும் நேற்றுக் காலை சம்பளம் வழங்காததையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் கிருஸ்ணபிள்ளையின் வீட்டுக்குச் சென்ற சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை தொடரப் போவதாகவும், முகாமைத்துவ பணிப்பாளர் சபையை நேரடியாக வந்து சந்திக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் முகாமைத்துவப் பணிப்பாளர் சபை வருவதற்கு தயக்கம் தெரிவித்த அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் கிருஸ்ணபிள்ளை திருகோணமலை சாலை மற்றும் நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி தலைமை அலுவலகம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு நவம்பர் மாத சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடு செய்ததையடுத்து நேற்று இரவு போராட்டத்தில் ஈடுபட்ட 72 ஊழியர்களுக்கு நவம்பர் மாதச் சம்பளம் வழங்கப்பட்டது. இதே வேளை சாலை முகாமையாளராக ரி.சாந்தகுணமும், மேலதிக சாலை முகாமையாளராக மனோகரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 06.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.